# தினமலர்

நிறுவனர் : டி.வி.ராமசுப்பையர்

சென்னை, வேலூர், புதுச்சேரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

Website: ww


# காந்திஜியின் தபால் தலை சிறப்பு கண்காட்சி

**திருவள்ளூர்**

திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் அடுத்த கசுவா சேவாலயா பள்ளியில், வெளிநாடுகளில் வெளியிடப்பட்ட காந்தி தபால் தலை சிறப்பு கண்காட்சி நடந்தது. ஓய்வு பெற்ற ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் ஜி.ராம்மோகன், காந்தி தபால் தலை ஆர்வலர் எஸ்.ராஜேஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இதில் ராம்மோகன் பேசுகையில், காந்தி, பாரதியார், விவேகானந்தர் ஆகியோரின் கொள்கைகளை பரப்பும் வகையில், சேவாலயா பல்வேறு சேவைகளை செய்து வருவதாக பாராட்டினார்.

120 நாடுகளில் வெளியிடப்பட்ட காந்தி தபால் தலை, நாணயங்கள், தபால் தலை உறைகள் மற்றும் அரிய வகை புகைப்படங்களை ஒருங்கே சேகரித்து வைத்திருந்ததை, சேவாலயா குழந்தைகள் தெரிந்து கொள்ளும் வகையில் கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தது.

சேவாலயா பள்ளி மாணவர்கள் மற்றும் சுற்றியுள்ள பள்ளிகளிலிருந்து மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயனடைந்தனர். முன்னதாக சேவாலயா நிறுவனர் முரளிதரன் வரவேற்றார்.

சேவாலயா அறங்காவலர் லட்சுமி நாராயணன் நன்றி கூறினார்.



திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் அடுத்த கசுவா சேவாலயா பள்ளியில், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வெளியிடப்பட்ட காந்தி தபால் தலை மற்றும் நாணயங்கள் சிறப்பு கண்காட்சியில் காந்தி தபால் தலை ஆர்வலர் எஸ்.ராஜேஷ் கலந்து கொண்டு பள்ளி மாணவியர்களுக்கு விளக்கினார். அருகில் சேவாலயா நிறுவனர் முரளிதரன்.


காஞ்சிபுர
உத்திரமே
பகுதி

எப்படி படித்

• ஒவ்வொ
• "விடைக
• ஒவ்வொ

டி.வி.ஆர் அகாடமி வழங்கும்
தினமலர்

தேர்வில் அதிக ம

காஞ்சிபு
நாள் : 23.10.2010 சனி
இடம் : அன்னை அஞ்சுகம்
ரயில்வே ரோடு, கா
நேரம் : காலை 8.30 மணி –
நண்பகல் 12.30 ம

கலந்து கொள்ளும் மாணவ மாண
♦ இறையன்பு, இ.ஆ.ப. மாணவர்
வழிகாட்டி புத்தகம் ♦ பரீட்சையில்
உடல்நலத்தை பாதுகாப்பது பற்ற